## கொளத்தூர் ஜி.கே.எம். காலனியில் — 2 புதிய திட்டப் பணிகள்

# ரூ.25.72 கோடியில் பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து 15 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்கிறார்!

**சென்னை, டிச. 18-**

***தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (18.12.2025) கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.25.72 கோடி செலவில் குளிரூட்டப்பட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, 15 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து,***

***சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில்***

***ரூ.17.47 கோடி மதிப்பீட்டில் கொளத்தூர், ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி மற்றும் பெரியார் நகர் அமுதம் அங்காடி என 2 புதிய திட்டப் பணிகளை துவக்கி வைக்கிறார்.***

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (18.12.2025), கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.25.72 கோடி செலவில் குளிரூட்டப்பட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 17.47 கோடி மதிப்பீட்டில் கொளத்தூர், ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மற்றும் பெரியார் நகர் அமுதம் அங்காடி என 2 புதிய திட்டப் பணிகளை துவக்கி வைக்கிறார்.

**கொளத்தூர், ஜி.கே.எம். காலனி, பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை :**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தியுள்ளார்கள். அதன் ஒரு பகுதியாக, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பகுதி மக்கள் தங்களது இல்லத் திருமணம் உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகளை குறைந்த செலவில் அதேசமயத்தில் அதிக வசதிமிக்க மண்டபத்தில் மனமகிழ்வுடன் நிறைவாக செய்திடும் வகையில் ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூபாய் 25.72 கோடி மதிப்பீட்டில் அனைத்து அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் புதிதாக சமுதாயக் கூடம் கட்டுவதற்கு கடந்த 7.3.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் பணிகளை தொடங்கி வைத்தார். தற்போது பணிகள் நிறைவுற்று, குளிரூட்டப்பட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய பேரறிஞர் அண்ணா பெயரிலான மிகப் பிரம்மாண்டமான திருமண மாளிகை கட்டப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில், தரைத்தளத்தில் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடனும், முதலாம் தளத்தில் ஒரே சமயத்தில் 435 நபர்கள் அமர்ந்து உணவு அருந்தும் வகையில் உணவுக்கூடம், இரண்டாம் தளத்தில் 800 இருக்கைகளுடன் கூடிய திருமண மண்டபம், மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான தங்கும் அறைகள் மற்றும் மின்தூக்கி வசதிகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு வாய்ந்த திருமண மாளிகையை நாளை (18.12.2025) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, பல்வேறு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி சிறப்பிக்கவுள்ளார். பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை மூலமாக கொளத்தூர் சட்டமன்ற தொகுதி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் வசிக்கும் ஏழை மற்றும் நடுத்தர வசதி உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும், பெரிதும் பயன்பெறவுள்ளனர்.

**கொளத்தூர், ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி :**

அரசு பள்ளி மாணவர்களுக்கு சிறந்த கல்வி கற்கும் வசதி ஏற்படுத்திடவும், வளர்ந்து வரும் அதிநவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு புதிய கட்டமைப்புகளுடன் அரசு பள்ளிகள் உருவாக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் இயங்கி வந்த பழமையான அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியை மேம்படுத்தும் வகையில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூபாய் 11.17 கோடி மதிப்பீட்டில் தரை தளம் மற்றும் மூன்று தளங்களுடன் அமையவுள்ளது. இப்பள்ளியில் 23 வகுப்பறைகள், 5 ஸ்மார்ட் வகுப்பறைகள், இயற்பியல், வேதியியல், கணினி மற்றும் அறிவியல் என நான்கு நவீன ஆய்வகங்கள், தேர்வு மையம், நூலகம், ஆசிரியர்கள் அறை, அலுவலக அறை, கழிப்பறைகள் மற்றும் சிறார் விளையாட்டு பகுதிகள் என பல்வேறு சிறப்பம்சங்களுடன் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் இப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்கள் பயன்பெறவுள்ளனர்.

**கொளத்தூர், பெரியார் நகர் அமுதம் அங்காடி :**

கொளத்தூர், பெரியார் நகரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த, பழமையான அமுதம் அங்காடியை மேம்படுத்தும் வகையில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூபாய் 6.30 கோடி மதிப்பீட்டில் தரை தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் அமையவுள்ளது. இக்கட்டடத்தில் இடமகன்ற அமுதம் பல்பொருள் அங்காடி, அலுவலக அறை, பணியாளர்கள் அறை, சேமிப்பு கிடங்கு, மின்தூக்கி வசதிகள், நகரும் படிக்கட்டுகள், நவீன கழிப்பறைகள், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடம் என பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. இந்த புதிய அமுதம் அங்காடியின் மூலம் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் பெரிதும் பயன்பெறவுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் இது போன்ற பல்வேறு திட்டங்கள் வாயிலாக அனைத்து தரப்பு மக்களும் பெரிதும் பயன் பெற்று வருகின்றனர்.

---

## ‘திராவிட மாடல்’ முதல்வரின் தொலைநோக்குச் சிந்தனை — முன்னெடுப்புகளால்

# தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி சிறப்பான உச்சத்தைத் தொட்டிருக்கிறது!

## நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

**சென்னை, டிச.18—**

**நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (17.12.2025) சென்னை, தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டி வருமாறு:—**

நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய தொலைநோக்குச் சிந்தனைகளால், அவருடைய தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் புதிய தொழில் கொள்கைகளால் வரக்கூடிய 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க பொருளாதாரத்தை நாம் எட்டுவோம் என்கின்ற மாபெரும் இலக்குடன் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களுடைய முன்னெடுப்புகளால், தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி இன்றைக்கு ஒரு மிகக் குறிப்பிடத்தக்க சிறப்பான ஒரு உச்சத்தைத் தொட்டிருக்கிறது.

**தமிழ்நாட்டின் பொருளாதாரம் உயர்வு!**

எனவே, நம்முடைய GSTP மாநில ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு இன்றைக்கு 2023-2024ஆம் ஆண்டுகளில் ரூபாய் 26.88 இலட்சம் கோடியாக இருந்த தமிழ்நாட்டினுடைய பொருளாதாரம், கடந்த ஆண்டு 2024-25ஆம் நிதியாண்டில் ரூ.31.19 இலட்சம் கோடிகளாக உயர்ந்து 16 சதவிகித வளர்ச்சியை நாம் இன்றைக்கு தொட்டிருக்கிறோம் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களுடன் நான் பகிர்ந்து கொள்கிறேன்.

நம்முடைய ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியாவின் தரவுகளின் வாயிலாக கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சி விகிதம் நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசின் நிதி நிர்வாக மேம்பாட்டு குழு, நான் தொடக்கத்தில் குறிப்பிட்டதுபோல தமிழ்நாடு அரசின் சிறப்பான கொள்கைகளுக்கும், எடுத்திருக்கக்கூடிய மாபெரும் வெற்றியாக நாம் இதைச் சொல்லலாம். இத்தகைய உயர் வளர்ச்சி விகிதம் என்பது கடந்த மூன்று ஆண்டுகளாகவே தொடர்ந்து இருக்கிறது.

**திராவிட மாடல் ஆட்சியின் வெற்றி!**

2021-22ஆம் ஆண்டுகளில் நாம் குறிப்பிட்ட காலத்தில் 15.91 சதவிகிதமாகவும், 2022-23-ஆம் ஆண்டுகளில் 14.47 சதவீதமாகவும், 2023-24ஆம் ஆண்டுகளில் 13.34 சதவீதமாக தொடர்ச்சியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதற்கு பிறகு இந்த வளர்ச்சி விகிதம் ஏற்பட்டு இன்றைக்கு அது 16 சதவீதத்தை தொட்டிருப்பது மிகப்பெரிய ஒரு வளர்ச்சியும், திராவிட மாடல் ஆட்சியின் வெற்றிக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாகவும் விளங்கியிருக்கிறது.

அதிலும் குறிப்பாக, இந்த வளர்ச்சியில் உற்பத்தித்துறை மிகப்பெரிய பங்களிப்பினை செய்திருக்கிறது. இந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் இந்தப் பொருளாதாரம் GSTPயின் வளர்ச்சி என்பது இந்த உற்பத்தித் துறையைப் பொறுத்தமட்டில், ரூபாய் 1.46 இலட்சம் கோடியாக இருந்தது, இரண்டு மடங்காக இன்றைக்கு அது பெருகி இருக்கிறது.

**உற்பத்தித் துறையில் மிகப்பெரிய முன்னேற்றம்!**

அதேபோல மகராஷ்டிராவில் ஒப்பிட்டு நோக்கினால், ஒரு வளர்ச்சி அடைந்த உற்பத்தித்துறை மாநிலமாக இருக்கக் கூடியதில், 0.71 இலட்சம் கோடியாக இருக்கக்கூடிய இந்த மகராஷ்டிராவை விட, தமிழ்நாடு உற்பத்தித் துறையில் மிகப்பெரிய ஒரு முன்னேற்றத்தை இன்றைக்கு கண்டிருக்கிறது.




அதற்குக் காரணம் தமிழ்நாட்டில், இன்றைக்கு பார்த்தால், ஏறத்தாழ 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றில் ஏறத்தாழ 27.7 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு பெறக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. இந்த பொருளாதார வளர்ச்சியில் குறிப்பாக கட்டுமானம் (Construction sectors) என்பது, இந்த வளர்ச்சிக்கு மிகுந்த அளவில் உதவி செய்யக்கூடிய வகையில், 2023-24ஆம் ஆண்டுகளில் 15.93 சதவிகிதமும், அதேபோன்று 2024-25ஆம் ஆண்டுகளில் 11 சதவிகிதமும் என்று அதற்கான பங்களிப்பைத் தந்திருக்கிறது.

**ஒரு ட்ரில்லியன் பொருளாதாரம் இலக்கு!**

அதுபோல, சேவைத்துறையை (Service Sector) எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியில் தலா 53% தன்னுடைய பங்களிப்பை செலுத்தி, real growth என்கின்ற வகையில் 2024-25ஆம் ஆண்டுகளில் நம்முடைய சேவைத் துறை 11.3 சதவீத அளவிற்கு தன்னுடைய பங்களிப்பை தந்திருக்கிறது. குறிப்பாக, ஒரு ‘ட்ரில்லியன்’ பொருளாதாரத்தை நாம் எட்ட வேண்டும் என்று சொன்னால், ஏற்றுமதியில் மிகப் பெரிய முன்னேற்றத்தை நாம் காண வேண்டும்.

அதைப்போல, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தொடர் முன்னெடுப்புகளால் பல்வேறு உலக நாடுகளில் அவர் பயணம் செய்து, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு, அதன் வாயிலாக முதலீட்டாளர்களின் சந்திப்பின் மூலமாக, 11 இலட்சத்து 40 ஆயிரத்து 731 கோடி ரூபாய் முதலீடுகள் பெறப்பட்டு, 1016 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 34 இலட்சத்து 8 ஆயிரத்து 522 இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் நாம் வேலை வாய்ப்புகளை கொண்டு வந்திருக்கிறோம்.

**ஏற்றுமதி 7 மடங்கு அதிகரிப்பு!**

ஏற்றுமதியை பொறுத்தவரையில், நாம் ‘1 டிரில்லியன்’ பொருளாதாரத்தை பெறுவதற்கு அடிப்படையாக அமைந்திருக்கின்ற தமிழ்நாட்டின் ஏற்றுமதியின் சாதனை, ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் தரவுகளின்படி

2021-22ஆம் நிதியாண்டில், 1.86 பில்லியன் டாலராக இருந்தது பின் 2022-23-ஆம் நிதியாண்டில் 5.37 பில்லியன் டாலராகவும், 2023-24ஆம் நிதியாண்டில் 9.56 பில்லியன் டாலராகவும், 2024-25ஆம் நிதியாண்டில் 14.65 பில்லியன் டாலராகவும் என மின்னணுப் பொருள்களின் ஏற்றுமதி மூன்று ஆண்டுகளில், ஏறத்தாழ ஏழு மடங்கு அதிகரித்திருக்கிறது. ஏறத்தாழ 700 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்பதை நம்முடைய அமைப்பு தெரிவித்திருக்கிறது.

இந்த மின்னணுப் பொருள்களின் ஏற்றுமதியில் நம்முடைய தமிழ்நாடு மிகப்பெரிய முன்னேற்றத்தை பெற்றிருக்கிறது. Welfare measures என்ற வகையில், தமிழ்நாடு வளர்ச்சி விகித குறியீடுகளில் முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், விடியல் பயணத் திட்டம், காக்கும் கரங்கள் திட்டம், நான் முதல்வன் திட்டம், காலை உணவுத் திட்டம் என்று பல்வேறு திட்டங்களின் மூலமாக தமிழ்நாட்டின் நலத் திட்டங்களிலும் தமிழ்நாடு அரசு ஒரு மாபெரும் கவனத்தைச் செலுத்தியிருக்கிறது.

அதேபோல, GR (Gross Environment Ratio) இன்றைக்கு உயர் கல்வியில் 47 சதவிகிதமாக அகில இந்திய சராசரி 28.4 சதவிகிதமாக இருக்கும்போது தமிழ்நாடு இன்றைக்கு 47 சதவிகிதம் என வந்திருக்கிறது. அதேபோல உயர்கல்வி அதிகமாக பெற்றிருக்கக்கூடிய மாநிலமாகவும் நாம் இன்றைக்கு வந்திருக்கிறோம்.

நான் சட்டமன்றத்தில் கூட சொன்னேன் - நிதிப் பற்றாக்குறையை (fiscal deficit) நாம் எப்போதும் நிதி மேலாண்மைக்கு உட்பட்டுதான் கையாண்டிருக்கிறோம் என்பதையும், அது மாநில ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும், நம்முடைய நிதிப் பற்றாக்குறை என்பது 3 சதவிகிதத்திற்குள்ளாகவே உள்ளது. வரக்கூடிய 2025-26ஆம் நிதியாண்டில் அது கட்டுப்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்திருக்கிறேன்.

அதேபோல, கடனுக்கும் (debt), மாநிலத்தின் உற்பத்தி மதிப்பீட்டிலான அந்த ratioவில், அது கடந்த 2021-22ஆம் ஆண்டில் 27 சதவிகிதமாக இருந்தது; 2024-25 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 26 சதவிகிதமாக குறைவாக வந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

**திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த நற்சான்று!**

ஒட்டுமொத்தமாக பார்த்தால், தமிழ்நாட்டின், நீடித்த, நிலையான வளர்ச்சி என்பது low inflation இருந்தாலும் சரி, அல்லது வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வருவதாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு கட்டத்திலும் நான் எடுத்துக் காட்டியிருக்கக்கூடிய தொழில் முதலீடுகளை ஊக்குவிப்பதாக இருந்தாலும் சரி, இவையெல்லாம் ஒட்டுமொத்தமாக நம்முடைய 1 டிரில்லியன் பொருளாதாரத்தை நாம் அடைவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய முன்னெடுப்பால், அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டிருக்கக்கூடிய பல்வேறு பணிகளால் இது சாத்தியமாகி இருக்கிறது.

இன்றைக்கு ஒட்டுமொத்த குறியீடாக 16 சதவிகித வளர்ச்சியை நம்முடைய ரிசர்வ் பேங்க ஃஆப் இந்தியா வழங்கி இருப்பதும், நம்முடைய தமிழ்நாட்டின் நிதி மேலாண்மைக்கு ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, தொழில் வளர்ச்சிக்கு, நம்முடைய சமூக வளர்ச்சிக்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு கிடைத்திருக்கக்கூடிய ஒரு மாபெரும் நற்சான்று இந்த 16 சதவிகிதம் வளர்ச்சி என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்துள்ளார்.

---

## அரசு மருத்துவச் சேவையைப் பயன்படுத்த வேண்டிய இலக்கை —

# தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் பெருமளவிற்கு எட்டியதாகக் கருதுகிறேன்!

## மருத்துவ இணை இயக்குநர்கள் ஆய்வுக் கூட்டத்தில் — அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

சென்னை, டிச.18-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (17.12.2025) சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்ககத்தில், அனைத்து மாவட்ட இணை இயக்குநர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆற்றிய உரை வருமாறு:



**காலிப்பணியிடங்களே இல்லை என்கின்ற நிலை உருவாக்கப்படும்!**

இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்துறையில் காலிப்பணியிடங்களே இல்லாத நிலையினை உருவாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையில் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் தொடர்ச்சியாக காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது. காலிப்பணியிடங்கள் நிரப்பும்போதே அவர்களுக்கு கலந்தாய்வு நடத்தி வெளிப்படைத்தன்மையுடன் பணிநியமனங்கள் நடைபெற்று வருகிறது. கோவிட் காலங்களில் பணிபுரிந்த 2160 ஒப்பந்த செவிலியர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 3,613 செவிலியர்கள் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. 986 மருந்தாளுநர்கள், 194 இருட்டறை உதவியாளர்கள், 42 இயன்முறை உதவியாளர், 46 பல் மருத்துவர் போன்ற புதிய பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவ திட்டம், செயற்கை கருத்தரித்தல் மையம், நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற பல திட்டங்கள் மக்களிடம் கொண்டு சேர்த்து வருகிறோம். இத்திட்டங்கள் மக்களுக்கு பெரிய அளவில் பயன் தந்துக் கொண்டிருக்கிறது.

இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு சுகப்பிரசவங்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு சிகிச்சை என்பது அதிகரித்துள்ளது. மகப்பேறு இறப்பு விகிதம் என்பது 5 வருடங்களுக்கு முன்பு 70 முதல் 90 என்கின்ற வகையில் இருந்தது. ஒரு இலட்சம் மகப்பேறு இறப்புகளுக்கு 39.5 ஆக குறைந்திருக்கிறது. குழந்தை மரண விகிதம் என்பது 7.7 ஆக குறைந்திருக்கிறது. மகப்பேறு இறப்பு விகிதம், குழந்தை மரண விகிதமும் பூஜ்ஜியம் நிலைக்கு கொண்டு வர வேண்டிய இலக்கு கொண்டு செயல்பட வேண்டும். விருதுநகர் மாவட்டம் கடந்த வருடம் பூஜ்ஜியம் இறப்பு விகிதம் கொண்டு வந்தார்கள். இது மிகவும் பாராட்டத்தக்கது.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நம் மருத்துவமனைகளுக்கு ஒன்றிய அரசின் விருதுகளாக NQAS, LAQShya போன்ற பல்வேறு விருதுகள் வாங்கி குவித்துள்ளோம். இந்த விருதுகள் நம் மருத்துவ கட்டிடங்களின் திறன், மருத்துவ சேவையின் தகுதிகள் அடிப்படையில் வழங்கப்பட்ட விருதுகள். இந்த சேவையை நாம் விருதிற்காக மட்டுமல்லாமல் அனைத்து வகையிலும் பின்பற்றி மக்கள் தரமான மருத்துவ சேவை தொடர்ந்து பெறுவதற்கான வழிவகையை அமைத்து தர வேண்டும்.

**மாவட்ட தலைமை மருத்துவமனைகள் - தரம் உயர்வு**

இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு ரூ.1,018 கோடி மதிப்பீட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவனைகள், 6 அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு இணையான மருத்துவமனைகள் என்று பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. இதில் திருத்தணி, திருப்பத்தூர் பகுதியில் இருந்த மருத்துவமனைகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. மேலும் அருப்புக்கோட்டை, ராஜபாளையம், திருக்கோவிலூர் போன்ற பகுகளில் உள்ள மருத்துவமனைகள் திறக்க தயாராக உள்ளது.

இம்மருத்துவமனைகளுக்கான கூடுதல் பணியிடங்களுக்கு நிதித் துறை ஒப்புதலுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. விரைவில் அதற்கான அனுமதி பெறப்பட்டு அனைத்து கட்டிடங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் திறந்து வைக்கப்படும். மேலும் ரூ.100 கோடி மதிப்பீட்டிலான கட்டிடங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வரும் 21.12.2025 அன்று இக்கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.

---

## திருத்தணி அருகே சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்த மாணவன் குடும்பத்திற்கு

# முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் காசோலை-பணி நியமன ஆணை!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினர்!

திருவள்ளூர் டிச.18-

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொண்டாபுரம் ஊராட்சி;யில் அரசு பள்ளியில் 7-ஆம் வகுப்பு படித்து வந்த மாணவன் செல்வன். மோஹித் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்த நிலையில் அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினையும் மற்றும் இரா.கி. பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மசால்ஜி பணிக்கு உயிரிழந்த மாணவன் தகப்பனார் சரத்குமாருக்கு மாவட்ட மகமை சார்பில் வெளிச்சந்தையில் (OutSource) பணி நியமன ஆணையினையும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் மற்றும் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் வழங்கினர். இதனை தொடந்து மாணவனின் பெற்றோர்க்கு ஆறுதல் கூறினார்.

இதுகுறித்து அமைச்சர் சா.மு.நாசர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நேற்றைய முன் தினம் நடந்த அகால விபத்து இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றிய கொண்டாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவன் மோஹித் (வயது 12), 7-ஆம் வகுப்பு படித்து கொண்டிருந்தார். அவருடைய தகப்பனார் பெயர் சரத்குமார். பள்ளி சுவர் இடிந்து விழுந்து அந்த இடத்திலேயே அகால மரணம் அடைந்தார். அதை அறிந்த உடன் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அந்த குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிதி உதவியும் அவருடைய தகப்பனாருக்கு அரசு பணி நியமன ஆணை வழங்கி இறுதி சடங்கு ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் நிதி உதவியும் அவர்களுக்கு அரசு வேலையும் வழங்கி உள்ளார்கள். இதனை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சிறப்பான முறையில் வழி வகுத்து கொடுத்தும், அதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் பிற தலைவர்கள் முயற்சி செய்து குடும்பத்திற்கு நிவாரண உதவி மற்றும் ஊரக வளர்ச்சி துறையில் வேலையும் கொடுத்திருக்கிறார்கள். உடற்கூராய்வு முடிவுகள் இன்னும் வரவில்லை. இது தொடர்பாக துறை ரீதியாக நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நிகழ்வின் போது திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் என்.எம்.கனிமொழி, திருத்தணி வட்டாட்சியர் குமார், இரா.கி.பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் மில்கி ராஜசிங் ஆகியோர் உள்ளனர்.

---

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு!

விருதுநகர் வடக்கு மாவட்டம், நரிக்குடி தெற்கு ஒன்றிய தொண்டர் அணி அமைப்பாளர் வேல்முருகன் மற்றும் ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் திருமதி விஜயலட்சுமி ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 600 018.
நாள்: 17-12-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.